புகார் வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வி. முரளிதரன்: அமைச்சருக்கு நன்றி. அதேபோல் அவர்கள் சம்பந்தமான ஒரு Question. விவசாயிகள் Vegetables-ஐ மார்க்கெட்டில் கொண்டு வந்து போட்டால் கமிஷன் 10% வாங்குகிறார்கள். ஆனால் seller கிட்டே 5% buyer கிட்டே 5%-தான் வாங்கவேண்டும் என்று உள்ளது. ஆனால் 10% கமிஷன் விவசாயிகளிடமே கேட்கிறார்கள். அதை 5% ஆகச் செய்துதர அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை நாங்கள் தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

11—

மாணவியர் விடுதி

***35855—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர், கண்டாச்சிபுரத்தில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி துவக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிய விடுதிகள் துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜி. கோதண்டராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்கால வளமான இந்தியாவை உருவாக்க தலைமை

ஏற்று இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற மக்களின் கல்வி முன்னேற்றத்தில், குறிப்பாக ஆதிதிராவிட பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். எனவேதான், +1, +2 வரை படிக்கும் ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். முகையூர் ஒன்றியம் 63 ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பரந்த அளவுகொண்ட ஒன்றியம். அந்த ஒன்றியத்தில் 41,617 ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். ஆதிதிராவிட மாணவியர் தங்கிப் படிப்பதற்கு விடுதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் அரசு, அடுத்து வருகிற கல்வி ஆண்டில் கண்டாச்சிபுரத்தில் ஆதிதிராவிட மாணவியர் தங்கிப் படிக்க அரசு ஆதிதிராவிட மாணவியர் விடுதி ஒன்று ஆரம்பிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி கல்வித் தரம் உயர்வதற்காக விடுதிகள் ஏற்படுத்தி, சுகாதார வசதிகளுடன் கூடிய தங்கும் இடமும் நல்ல தரமான உணவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. 1,076 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஏறக்குறைய 75 ஆயிரம் மாணவ, மாணவியரும், 26 பழங்குடியினர் நல விடுதிகளில் 1,300 மாணவ, மாணவியரும், தொண்டு நிறுவன விடுதிகளில் 4,300 மாணவ, மாணவியரும், உண்டு உறைவிடப் பள்ளிகளில் ஏறக்குறைய 45 ஆயிரம் மாணவ, மாணவியரும் ஆக மொத்தம் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள். அதற்கான செலவு ரூ. 39.28 கோடி; உணவுக்கு மட்டும் செலவு செய்யப்படுகிறது. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் தொடர் செலவினம் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயற்குறிப்பினையும் நிதிநிலை சீரடைந்தவுடன் பரிசீலிக்கலாம் என மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளதால் முகையூர் தொகுதி கண்டாச்சிபுரத்தில் புதிய ஆதிதிராவிடர் நல விடுதி ஆரம்பிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 12, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

12—

புதிய வழித்தடம்

•6459—திருமதி எஸ். கனிதா சம்பத்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு வரை சென்றுவர புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில், அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர், கொட்டமேடு வழித்தடத்தில் மலாரிப்பேட்டையைத் தவிர்த்து மற்ற அனைத்து ஊர்களும் போதிய பேருந்து வசதி பெற்றிருப்பதால் கோரிக்கை வழித்தடத்தில் புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். கனிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள் கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு இங்கேயெல்லாம் விவசாயம் அதிகம்; காய்கறிகள் பூச்செடிகள்